# அயல்நாட்டுத் தொடர்புகள்

**முன்னுரை:-**

தமிழர்கள் கடல் வாணிகத்தின் வாயிலாக எகிப்து, பாலஸ்தீனம், மெசபடோமியா, பாபிலோனியா, கிரீஸ், ரோம், சீனா, மலேசியா, சாவகம் வட போர்னியா ஆகிய நாடுகளுடன் தொடர்பு வைத்து இருந்தனர்.

**பண்டையத் தமிழரின் அயலகத் தொடர்புகள்:-**

'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' என்கிறது மூதுரை. இனிய இல்லறம் செய்யவும் பொருள் வேண்டும். நல்லறங்கள் செய்யவும் பொருள் வேண்டும். தமிழகத்திற்கு பலரும் வந்து வணிகம் செய்து வந்தனர்.

- பொருள்
  - உள்நாட்டுப் பொருள்
  - அயல் நாட்டுப்பொருள்
- நாடு
  - மேலை நாடு
  - கீழை நாடு

**தமிழரின் ஏற்றுமதி பொருட்கள்:-**

தமிழகத்துப் பண்டங்களான ஏலம், இலவங்கம், இஞ்சி, மிளகு ஆகியவற்றிற்கு மேற்கு ஆகிய நாடுகளில் மிகுந்த தேவை ஏற்பட்டது.
இதனைக் கருத்தில் கொண்டு தமிழர் இந்த வாசனைப் பொருட்களை அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தனர்.

**வரலாற்று குறிப்பு:-**

யூதர்களின் ஆதி சமயத் தலைவர் மோசஸ் தாம் நிகழ்த்தி வந்த இறைவழிபாட்டில் "ஏலக்காயை" பயன்படுத்தினார் என்று பழைய ஏற்பாடு கூறுகிறது.

உரோமாபுரிக்கும் இந்திய நாடுகளுக்கும் நெருங்கிய வாணிபத் தொடர்பு இருந்தது. பெண்கள் அழகு செய்வதற்கான வாசனைப் பொருள்களை இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்ததனால் உரோம நாட்டின் செல்வம் வீணாகச் செலவானதைக் கசிந்தது என்றும் மேனாட்டாசிரியர் குறிக்கின்றார்.

CPA College

யவனர்களைப்பற்றிய செய்திகள் சங்க இலக்கியங்களிலும், சிலப்பதிகாரத்திலும் காணப்படுகின்றன.

துறைமுகப்பட்டினங்கள்

தொண்டி – திண்டிஸ்
முசிறி – முஸிரிஸ்
குமரி – கொமாரி
கொற்கை – கொல்காய்
நாகப்பட்டினம் – நிகாமா
காவிரிப்பூம்பட்டினம் – கமரா
புதுச்சேரி – பொதுகே
மசூலிப்பட்டினம் – மசோலியா

CPA College